DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
UDUMALPET

Sessions CASE No :126/2016

Deposition of Witness for : P.W.17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்பிரமணி | Calling | | |
| Husband's Name | : | மாரிமுத்து | Taluk | : | |
| Age | : | | District | : | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 05.04.2024.

**Crl.M.P 138/2023 நாள்: 06.12.2023 அனுமதிக்கப்பட்டதின் பேரில் அ.சா.17 மீண்டும் அழைக்கப்பட்ட சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு**

**3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் பள்ளபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மோட்டார் வேலை செய்து வருகிறேன். 12.02.2015 அன்று போலீசார் என்னை விசாரித்தார்கள். 07.02.2015 ஆம் தேதியன்று போலீசார் என்னை விசாரித்தனர் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. போலீசார் என்னை அழைத்துச் சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்ததாக சொன்னால் அது தவறு. எனது ஊருக்கும், குறிச்சிகோட்டைக்கு எவ்வளவு தூரம் என்றால் 1 கிலோ மீட்டர். 3 ஆம் எதிரி மகேஷ்வரியை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அவரது திருமணத்தின் போது பார்த்துள்ளேன். 3 ஆம் எதிரியை அவரது திருமணத்தின்போது நான் பார்த்ததாக போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது ஊரில் இருந்து நல்லாம்பாளையம் வடக்கு திசையில் அமைந்துள்ளது. அலங்கியம் காவல் நிலையத்திற்கு நான் சென்றுள்ளேன் என்று சொன்னால் நல்லாம்பாளையத்திலிருந்து திருப்பி செல்லும்போது அலங்கியம் காவல் நிலையத்திற்கு சென்றேன். 12.02.2015 ஆம் தேதி என்னை எங்கு வைத்து போலீசார் அழைத்தனர் என்றால் குறிச்சிகோட்டையில் உள்ள டீக்கடையில் வைத்து போலீசார் என்னை அழைத்து சென்றனர். பாலாஜி இறந்துவிட்ட விவரம் வெளியில் உள்ள நபர்கள் சொன்னதின்

மூலமும் பத்திரிக்கையின் மூலமும் தெரிந்து கொண்டேன்.த 12.5.2015 ஆம் தேதியன்று அலங்கியம் காவல் நிலையத்திலிருந்து போலீசாருடன் நானும் முருகானந்தமும் உடுமலைப்பேட்டை வழியாக நல்லாம்பாளையத்திற்கு சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. 3 ஆம் எதிரியின் பெற்றோர் வீடு அமைந்துள்ள நல்லாம்பாளையத்திற்கு நான் முன்பு சென்றதில்லை. அவரது வீடு எனக்கு அடையாளம் தெரியாது. என்னுடன் வந்து முருகானந்தம் என்னுடைய மாமனார் ஆவார். முருகானந்த்திற்கும் நல்லாம்பாளையத்தில் உள்ள 3 ஆம் எதிரி மகேஷ்வரியின் பெற்றோர் வீடு தெரியாது என்றால் சரிதான். 12.02.2015 ஆம் தேதியன்று நான் தான் 3 ஆம் எதிரி மகேஷ்வரியின் வீட்டை போலீசாருக்கு அடையாளம் காட்டியதாக சொல்லியிருந்தால் அது தவறு. நாங்கள் குறிச்சிகோட்டையில் இருந்து சுமார் 7.00 மணியளவில் கிளம்பிவிட்டோம். நல்லாம்பாளையத்திற்கு என்னுடன் மொத்தம் 8 பேர் சென்றோம். 8 நபர்களுக்கு குறைவாக நல்லாம்பாளையத்திற்கு சென்றதாக சொல்லியிருந்தால் அது தவறு. 10.02.2015, 11.02.2015 மற்றும் 12.02.2015 அன்று காலையிலும் நானும் முருகானந்தமும் அலங்கயிம் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் நல்லாம்பள்ளிக்கு 12.02.2015 அன்று காலை 9.00 மணிக்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். குறிச்சிக்கோட்டையிலிருந்து நல்லாம்பாளையத்திற்கு எவ்வளவு தூரம் என்றால் சுமார் 17–18 கிலோ மீட்டர் இருக்கும். நாங்கள் பயணம் செய்த வாகனம் நல்ல நிலையில் உள்ள வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனத்தில் 17–18 கிலோ மீட்டர் தூரத்தில் சுமார் 20 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். 12.02.2015 அன்று நல்லாம்பாளையத்திலிருந்து நாங்கள் 1.30 மணிக்குதான் கிளம்பினோம். மதியம் 1.00 மணிக்கு நாங்கள் அலங்கியம் காவல் நிலையம் சென்றோம் என்றால் சரியல்ல. 3 ஆம் எதிரி மகேஷ்வரியின் வீட்டில் வைத்து நான் கையொப்பம் செய்தேன். தட்டச்சு செய்யப்பட்ட பேப்பரில் நான் கையொப்பம் செய்தேன். நல்லாம்பாளையம் என்பது சின்ன கிராமம் என்றால் சரிதான். லேப்டாப்பில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது. வெளியில் சென்று பிரின்ட் எடுக்கப்பட்டது. யார் பிரின்ட் எடுத்து வந்தது என்றால் அங்கிருந்து போலீசாரில் ஒருவர் வெளியில் சென்று பிரின்ட் எடுத்து வந்தார். லேப்டாப்பை கொண்டு சென்று பிரின்ட் எடுக்கப்பட்டதா அல்லது பென்ரைவ் கொண்டு

சென்று பிரின்ட் எடுக்கப்பட்டதா என்றால் என்னால் தற்போது ஞாபகப்படுத்தி கூறஇயலவில்லை. நல்லாம்பாளையத்தில் கிராம நிர்வாக அலுவலர் குடியிருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலரிடம் போலீசார் விசாரித்தார்களா என்பது எனக்கு தெரியாது. எதற்காக என்னை போலீசார் அழைத்து சென்றார்கள் என்றால் கொலை வழக்கிற்காக போலீசார் என்னை 3 ஆம் எதிரி மகேஷ்வரியின் வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். இறந்துபோன பாலாஜி என்ன வகையில் சொந்தம் என்றால் நானும் அவரும் மோட்டார் மாட்ட செல்வோம். 12.02.2015 அன்று நான் நல்லாம்பாளையத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. நல்லாம்பாளையத்தில் நான் சுமார் 1.30 மணிநேரம் இருந்தேன். நான் சொன்ன துபோல் சொன்ன நேரத்தில் நல்லாம்பாளையத்தில் 3 ஆம் எதிரியை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 3 ம் எதிரி என் முன்னிலையில் எந்தவித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 3 ஆம் எதிரியின் வீட்டிலிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள செல்போன் 3 ஆம் எதிரிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. இறந்துபோன பாலாஜி மூலமாக நான் ஆதாயம் அடைந்த நபர் என்பதால் 3 ஆம் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அந்த விவரங்கள் சரியல்ல. போலீசார் சொல்லி கொடுத்ததின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை.**

Taken down to my direction in my presence and hearing, and under my personal direction and superintendance and read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-V.John Mino, B.A.,B.L.,
Additional District and Sessions Judge,
Udumalpet.